بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/01/2021 அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّاۤ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝٦ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝٧

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் போர்களில் கலந்து கொண்டது தொடர்பாக எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் பத்ர் போரில் கலந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில், அவர்களது துணைவியாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளுமான ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் உடல்நலத்தைப் பார்த்துக் கொள்வதற்காக மதீனாவிலேயே இருக்குமாறு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். மேலும், அவர்களை பத்ர் போரில் கலந்து கொண்டவர்களைப் போன்றே கூறியிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு பத்ர் போரில் கலந்து கொண்டவர்களைப் போல் போர்ச் செல்வத்திலும் நற்கூலியிலும் பங்கு நிர்ணயித்தார்கள்.

கத்ஃபான் போர் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு நடந்தது. அதற்காக நஜ்த் பகுதியை நோக்கி புறப்பட்ட போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். ஆக இந்த வகையில் அன்னார் அதிலும் கலந்து கொள்ளவில்லை. இந்தப் போரின் விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ., (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த சில கோத்திரங்கள் அதாவது, பனூ ஸஃலபா மற்றும் பனூ முஹாரிபுடைய மக்கள் தமது ஒரு பெயர்போன போர்வீரனின் தூண்டுதலின் பேரில் மதீனா மீது திடீர் தாக்குதல் தொடுக்கும் எண்ணத்தில் நஜ்த் உடைய ஒரு பகுதியான ஸீ அம்ரில் ஒன்று கூட ஆரம்பித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 சஹாபாவைக் கொண்ட குழுவைத் தம்முடன் அழைத்துக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மிக வேகமாகப் பயணித்தவாறு ஸீ அம்ருக்கு அருகில் சென்றடைந்து விட்டார்கள். பகைவர்களுக்கு அன்னாரின் வருகை குறித்து தெரிய வந்தது. எனவே அவர்கள் உடனடியாக அக்கம் பக்கத்திலிருந்த குன்றுகளில் ஏறி தம்மைத் தற்காத்து கொண்டனர். முஸ்லிம்கள் ஸீ அம்ரை சென்றடைந்த போது களம் காலியாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேறு வழியின்றி திரும்பிச் செல்ல ஆணையிட நேர்ந்தது.

உஹது போர் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். போருக்கிடையில் சஹாபாவின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு போர்க்களத்திலிருந்து இங்கும் அங்கும் சென்று விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியால் முஸ்லிம்களின்

எஞ்சியிருந்த துணிவும் அகல ஆரம்பித்தது. அவர்களின் குழுமம் முற்றிலும் சிதறி போய் விட்டது. அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று பாகங்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விபட்டு சிதறி போய் விட்டது. ஆனால், இந்தக் குழு மிகவும் குறைவாக இருந்தது. அந்த மக்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

ஆனால், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி அந்த நேரத்தின் குறிப்பிட்ட நிலைமைகள், அம்மக்களின் உள்ளத்து ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான்.

இரண்டாவது குழுவில் இருந்தவர்கள், அவர்கள் சிதறி போய் ஓடிவிடவில்லை. எனினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விபட்டு ஒன்று துணிவிழந்து அமர்ந்து விட்டிருந்தனர். இல்லையெனில், தற்பொழுது சண்டையிடுவதை வீணானதாகக் கருதிவந்தனர். எனவே போர்க்களத்திலிருந்து ஒருபுறம் அகன்று கவலைத் தோய்ந்து அமர்ந்து விட்டனர்.

மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. அவர்களில் சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்தனர். மேலும் தன்னிகரில்லா வாழ்வை அர்ப்பணித்தலின் திறமையை வெளிபடுத்திக் கொண்டிருந்தனர். பெரும்பாலானவர்களோ போர்க்களத்தில் கலைந்து போய் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

எவ்வாறிருப்பினும் எடுத்துக் கூறப்படுவதாவது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிராசையடைந்தோ அல்லது வேறு ஏதோ காரணத்தினாலோ, அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். இவ்வாறு நிராசையடைந்து அமரக்கூடியவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பும் கிடைக்கப் பெறுகிறது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹுதைபியா உடன்படிக்கையின் போது நடந்த தூதரை அனுப்புதல் மற்றும் பைஅத்துர் ரிஸ்வான் ஆகியவற்றில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பங்களிப்பு என்னவாக இருந்தது? அன்னார் தொடர்பாக எந்த சம்பவங்கள் கிடைக்கப்பெறுகின்றன? ஆகியவற்றை தற்பொழுது நான் எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரும் அன்னாருடைய சஹாபாவும் அமைதியான முறையில் தமது தலைகளை சிரைத்துக் கொண்டவாறு தமது முடிகளை கத்தரித்துக் கொண்டவாறு பைத்துல்லாஹ்வில் நுழைவதாகக் கனவு கண்டார்கள்.

இந்தக் கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ஸுல் கஅதா மாதம் தமது 1400 சஹாபாவோடு உம்ராவை நிறைவேற்றுவதற்காக மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். ஹுதைபியா எனும் இடத்தில் அன்னார் முகாமிட்டார்கள். குறைஷியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உம்ராவை நிறைவேற்றுவதிலிருந்து தடுத்தார்கள். இரு தரப்பினருக்கு மத்தியில் தூதரை அனுப்புதல் ஆரம்பமானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் ஆவேச நிலையைப் பற்றி கேள்விப்பட்ட போது அன்னார், மக்காவிலேயே வசிக்கக்கூடிய, குறைஷியர்களின் ஏதேனும் கண்ணியத்திற்குரிய கோத்திரத்தைச் சேர்ந்த, தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு நபரை அனுப்ப வேண்டும் என்று கூறினார்கள். ஆக, இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அனுப்பி வைக்கப்பட்டது.

ஹுஸூர் அவர்கள் இந்த சம்பவத்தை விளக்கியவாறு கூறினார்கள்: குறைஷியர்களிடம் அப்பொழுது ஒரு கடுமையான சிதறல் தன்மை உருவாகிக் கொண்டிருந்தது. மக்களின் இரு குழுக்கள் உருவாகிவிட்டன. ஒரு குழு, எந்நிலையிலும் முஸ்லிம்களைத் திருப்பி அனுப்புவதில் பிடிவாதம் கொண்டு போர் சிந்தனையில்

உறுதியாக நிலைநின்றது. ஆனால், இன்னொரு குழு அதைத் தனது தொன்மையான மத வழக்கத்திற்கு எதிராகக் கண்டு அஞ்சிக் கொண்டிருந்தது. மேலும், ஏதேனும் கண்ணியத்திற்குரிய உடன்படிக்கைக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தது. எனவே தீர்மானம் தள்ளிப்போய் கொண்டேயிருந்தது.

மக்கத்து குறைஷியர்கள் தமது உத்வேகத்தில் குருடர்களாகி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாரின் சஹாபாவும் மக்காவுக்கு மிக அருகில் வந்தவுடன் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து இயன்ற அளவு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் எண்ணம் கொண்டிருந்தனர். ஆக இந்த நோக்கத்திற்காக அவர்கள் 40, 50 பேர் கொண்ட ஒரு குழுவை ஹுதைபியாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

மேலும், அவர்களுக்கு, 'இஸ்லாமிய முகாமுக்கு அக்கம் பக்கம் சுற்றியவாறு காத்துக் கொண்டிருங்கள். சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களுக்கு இழப்பு ஏற்படுத்தி வாருங்கள்' என்று வழிகாட்டியிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் குறைஷியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்லவும் முயன்றனர். எனினும், இறைவன் அருளால் முஸ்லிம்கள் தமது இடத்தில் விழிப்போடு இருந்தார்கள். ஆக, குறைஷியர்களின் இந்த சூழ்ச்சியின் இரகசியம் வெளிப்பட்டு விட்டது. இவர்கள் அனைவரும் பிடிக்கப்பட்டுவிட்டனர்.

எவ்வாறிருப்பினும் நாம் இந்த அனைத்து நிலைமைகளையும் அதன் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுமை, மன தைரியம் மற்றும் அமைதிக்கான முயற்சி ஆகியவற்றைப் பார்க்கும் பொழுது, இது எத்தகைய ஒரு பொறுமை மற்றும் அமைதிக்கான முயற்சியெனில், அதற்கு உலகில் எந்த முன்னுதாரணமும் கிடைக்க முடியாது என்பது நமக்கு தென்படுகிறது. அன்னார் தொடர்ச்சியாக அமைதிக்கான சூழ்நிலை உருவாகிவிட வேண்டும் என்று முயற்சி மேற்கொண்டு வந்தார்கள்.

இந்த நிலைமைகளிலும் அன்னார் சமரசத்திற்கான முயற்சியைக் கைவிடவில்லை. மாறாக, அன்னார் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம், 'நீங்கள் மக்கா சென்று, முஸ்லிம்கள் தரப்பிலிருந்து தூதுத்துவத்திற்கான கடைமையை நிறைவேற்றுவது சிறப்பாக இருக்கும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இந்தத் தொண்டுக்காக ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் கோத்திரமான பனூ உமய்யா தற்பொழுது மிகவும் செல்வாக்கு பெற்றுள்ளது. மக்காவாசிகளும் உஸ்மானுக்கு எதிராகத் தீங்கிழைக்க துணியமாட்டார்கள். வெற்றிக்கு அதிக நம்பிக்கை உள்ளது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்து விட்டது. அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அவர்கள் மக்கா சென்று குறைஷியர்களின் அமைதி நிறைந்த எண்ணங்கள் மற்றும் உம்ராவின் எண்ணம் குறித்து தெரியப்படுத்துமாறு கூறினார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குத் தம் தரப்பிலிருந்து ஒரு மடலையும் எழுதித் தந்தார்கள். அது குறைஷியர்களின் தலைவர்கள் பெயரில் இருந்தது. அந்த மடலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் வந்திருப்பதன் நோக்கத்தை எடுத்துரைத்தார்கள்.

மேலும், 'எங்கள் நோக்கம் ஓர் இபாதத்தை நிறைவேற்றுவது மட்டும் தான். நாங்கள் முழு அமைதியான சூழலில் உம்ராவை நிறைவேற்றி விட்டு திரும்பிச் சென்றுவிடுவோம்' என்று குறைஷியர்களுக்கு உறுதியளித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், "மக்காவில் இருக்கும் பலவீனமான முஸ்லிம்களையும் சந்திக்க முயற்சி செய்யுங்கள். அவர்களின் தைரியத்தை அதிகரியுங்கள். அவர்களிடம், 'இன்னும் சற்று பொறுமையோடு செயல்படுங்கள். இறைவன் அண்மையில் வெற்றிக்கான கதவுகளைத் திறக்கவுள்ளான்' என்று கூறுங்கள்" என்று கூறினார்கள்.

இந்தத் தூத்துச் செய்தியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்கா சென்றார்கள். அபூ ஸுஃப்யானை சந்தித்து மக்காவாசிகளின் ஒரு பொது சபையில் ஆஜரானார்கள். அந்த சபையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மடலை முன் வைத்தார்கள். இருந்தும் கூட அவர்கள் அனைவரும் எந்நிலையிலும் முஸ்லிம்கள் இவ்வாண்டு மக்காவிற்குள் நுழையக் கூடாது என்ற தமது பிடிவாதத்தில் நிலைத்து நின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அழுத்தம் கொடுத்த போது குறைஷியர்கள், ‘உங்களுக்கு அதிக ஆர்வமிருந்தால், நாங்கள் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்ய வாய்ப்பு கொடுத்து விடுகிறோம்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ மக்காவிற்கு வெளியில் தடுக்கப்பட்டு, நான் தவாஃப் செய்வதா! இது எப்படி முடியும்?’ என்று கேட்டார்கள். ஆனால், குறைஷியர்கள் எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிராசையடைந்து திரும்பிச் செல்ல ஆயத்தம் மேற்கொள்ளலானார்கள். அந்த சந்தர்ப்பத்தில் மக்காவின் தீங்கிழைக்கக் கூடியவர்களுக்கு ஒரு தீய யோசனை வந்தது. அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும், உடனிருந்தவர்களையும் மக்காவில் தடுத்து நிறுத்திவிட்டார்கள். இதனால், ‘மக்காவாசிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்று விட்டார்கள்’ என்ற வதந்தி முஸ்லிம்கள் மத்தியில் பரவி விட்டது.

இந்தச் செய்தி ஹுதைபியாவை எட்டிய போது, முஸ்லிம்களிடம் கடுமையான உத்வேகம் உருவானது. ஏனெனில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனும் கண்ணியத்திற்குரிய சஹாபாவில் ஒருவராகவும் இருந்தார்கள். மேலும், இஸ்லாமிய தூதுவராக மக்கா சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக அனைத்து முஸ்லிம்கள் மத்தியிலும் அறிவிப்பு செய்து, அவர்களை ஒரு கருவேல மரத்தின் கீழ் ஒன்றிணைத்தார்கள்.

மேலும், ‘இந்தத் தகவல் சரியானது என்றால், இறைவன் மீதாணையாக! நாம் உஸ்மானுக்காகப் பழிவாங்காத வரை இவ்விடத்தை விட்டு நகரமாட்டோம்’ என்று கூறினார்கள். பிறகு அன்னார் சஹாபாவிடம், ‘‘வாருங்கள்! எனது கை மீது கை வைத்து, ‘உங்களில் எவரும் புறமுதுகு காட்டமாட்டார்; தனது உயிரைப் பணயம் வைப்பாரே தவிர, எந்நிலையிலும் தனது இடத்தை விடமாட்டார்’ என்று உறுதிமொழி எடுங்கள்’’ என்று கூறினார்கள்.

இந்த அறிவிப்பைக் கேட்ட சஹாபா, ஒருவர் மற்றவர் மீது விழுந்தவாறு பைஅத் செய்வதற்காக முண்டியடித்துச் சென்றனர். பைஅத் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இடக்கையை வலக்கை மீது வைத்து, ‘இது உஸ்மானின் கையாகும். ஏனெனில், அவர் இங்கு இருந்திருந்தால் இந்தத் தூய வாணிபத்தில் யாரை விட்டும் பின்தங்கி இருந்திருக்க மாட்டார். ஆனால், தற்பொழுது அவர் இறைவன் மற்றும் அவனுடைய தூதரின் பணியில் மூழ்கியுள்ளார்’ என்று கூறினார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் இந்த பைஅத் பைஅத்துர் ரிஸ்வான் என்ற பெயரில் பிரசித்தி பெற்றுள்ளது. அதாவது, எதில் முஸ்லிம்கள் இறைவனின் முழுமையான தன்னிறைவின் வெகுமதி பெற்றார்களோ அந்த பைஅத். திருக்குர்ஆனும் இந்த பைஅத்தைப் பற்றி குறிப்பாகக் கூறியுள்ளது. ஆக அல்லாஹ் கூறுகிறான்:

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ قُلُوْبِهِمْ فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا ﴿١٩﴾

“நம்பிக்கையாளர்கள் மரத்திற்கடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது நிச்சயமாக அல்லாஹ் அவர்களைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைந்து,

அவர்களது உள்ளங்களிலிருந்த (நம்பிக்கை) தனை அறிந்து அவர்களுக்குச் சாந்தியை இறக்கி, அண்மையில் வரவிருக்கும் ஒரு வெற்றியினை அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான்." (அல் ஃபத்ஹ் : 19)

குறைஷியர்களுக்கு இந்த பைஅத் குறித்து தகவல் கிடைத்த போது, அவர்கள் அச்சமடைந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் அவர்கள் உடனிருந்த மக்களையும் விடுவித்து மட்டும் விடவில்லை. மாறாக, தமது தூதுவர்களுக்கும், 'இப்பொழுது எப்படியாவது முஸ்லிம்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள்' என்று வழிகாட்டினார்கள். அந்த உடன்படிக்கைக்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு இருந்தன:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் இந்த ஆண்டு திரும்பிச் சென்று விடவேண்டும். அடுத்த ஆண்டு அவர்கள் மக்கா வந்து உம்ராவுக்கான அம்சங்களை நிறைவேற்றலாம். எனினும், உறையிலிடப்பட்ட வாளைத் தவிர எந்த ஆயுதமும் உடனிருக்கக்கூடாது. மக்காவில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கக்கூடாது.

மக்கவாசிகளில் யாராவது ஓர் ஆண் மதீனா சென்றால், அவர் முஸ்லிமானாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு மதீனாவில் தஞ்சம் அளிக்கக்கூடாது; திருப்பி அனுப்பி விட வேண்டும். ஆனால், எவராவது ஒரு முஸ்லிம் மதீனாவை விட்டுவிட்டு மக்கா வந்து விட்டால், அவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

அரபு கோத்திரங்களில், எந்த கோத்திரத்தினர் விரும்பினாலும் முஸ்லிம்களின் தோழமைக் கோத்திரமாகலாம். எந்த கோத்திரத்தினர் விரும்பினாலும் மக்கத்தினரின் தோழமைக் கோத்திரமாகலாம். இந்த உடன்படிக்கை இப்பொழுதுக்குப் பத்து ஆண்டுகள் வரைக்குமாக இருக்கும். மேலும், இந்த காலகட்டத்தில் குறைஷியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் போர் நிறுத்தி வைக்கப்படும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொடர்பாக இனிவரும் காலங்களிலும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்!

தற்பொழுதும் நான் துஆக்களின் பால் கவனமூட்ட விரும்புகிறேன். பாகிஸ்தானின் நிலைமைக்காகக் குறிப்பாக துஆ செய்யுங்கள். இப்பொழுது அஹ்மதிகள் வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் பாதுகாப்பாக இல்லை. எல்லா இடங்களிலும் மவ்லவி கூற, காவல்துறையினர் சென்றடைந்து விடுகின்றனர். சில நல்லியல்புள்ள காவல்துறையினரும் உள்ளனர். அவர்கள், 'எங்களுக்கு உங்கள் மீது அனுதாபம் இருக்கிறது. ஆனால், நாங்கள் என்ன செய்ய? எங்களுக்கு எந்த அளவு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்றால், எங்கள் அதிகாரிகள் சொல்வதை நாங்கள் செய்ய வேண்டியுள்ளது' என்று கூறுகின்றனர்.

ஆக, அல்லாஹ் இத்தகைய தீய இயல்புடைய அதிகாரிகளிடமிருந்து நம்மைக் காப்பாற்றுவானாக! நாட்டைக் காப்பாற்றுவானாக! ஒவ்வோர் அஹ்மதிக்கும் சுதந்திரமான முறையிலும் பாதுகாப்பான முறையிலும் தனது நாட்டில் வசிக்க நல்வாய்ப்பு வழங்குவானாக!

குறிப்பாக துஆ செய்யுங்கள். இந்த துஆக்கள் தொடர்ந்து கொண்டிருந்தால், விரைவாக நாம் எதிரிகளின் முடிவு மிகவும் படிப்பினைக்குரியதாக அமையக்காண்போம். இன் ஷா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கும் நல்வாய்ப்பும் வழங்குவானாக! அவற்றை ஏற்றும் கொள்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللهِ رحمکم الله اِنَّ اللهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ
ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னி)